முடிவுக்கு வரவும், நம்பிக்கையும் நிம்மதியும் புத்தம் புதிதாய் விடியவும், எமக்காக இரக்கத்தின் தந்தையாம் இறைவனிடம் மன்றாடும். கானாவில் நீர் செய்ததுபோல், உம்முடைய இறைமகனிடம் எடுத்துக்கூறி முறையிட்டருளும். இதனால், நோயாளிகளின் குடும்பங்களும், பலியானவர்களின் குடும்பங்களும் தேற்றப்படட்டும்; அவர்களுடைய இதயங்கள் நம்பிக்கைக்கும் பற்றுறுதிக்கும் திறக்கப்படட்டும்.

இந்த அவசரகாலத்தின்போது முதல் வரிசையில் நின்று போராடும் மருத்துவர்களையும், செவிலியர்களையும், தூய்மைப் பணியாளர்களையும், தன்னார்வலர்களையும் மேலும் பிறரைப் பாதுகாக்க தங்கள் வாழ்வைப் பொருட்படுத்தாமல் துணிபவர்களையும் பாதுகாத்தருளும். அவர்களுடைய துணிச்சல்மிக்க முயற்சியை ஆதரித்து, அவர்களுக்கு வலிமையையும் தாராள உள்ளத்தையும் தொடர் உடல்நலத்தையும் அளித்தருளும்.

பகலிலும் இரவிலும் நோயாளிகளுக்கு அருகிலிருந்து உதவி செய்பவர்களுக்கும் மேய்ப்புப்பணியில் கொண்டிருக்கும் ஆர்வத்தாலும் நற்செய்திக்கு உண்மையாக இருப்பதாலும் ஒவ்வொருவரையும் ஆதரித்து அரவணைத்து உதவி செய்ய முயற்சிக்கும் அருள்பணியாளர்களின் அருகில் இருந்தருளும். வாழ்வின் அடிப்படைத் தேவைகளின்றி துன்புறுவோருக்கு உதவிட முன்வரவும், தொலைநோக்குப் பார்வையாலும் தோழமையுணர்வாலும் தூண்டப்பட்டு, நல்ல சமூக மற்றும் பொருளாதாரத் தீர்வுகளைத் திட்டமிடுவதற்கு ஞானம், உள்ளார்ந்த அக்கறை மற்றும் தாராள மனப்பான்மை ஆகியவற்றுடன் நாட்டுத் தலைவர்களை ஆசீர்வதித்தருளும்.

மிகவும் புனிதம் நிறைந்த மரியே! ஆயுதங்களைப் பெருக்குவதற்காகவும் சேமித்து வைப்பதற்காகவும் மிகப்பெரிய தொகையை முதலீடு செய்வதற்குப் பதிலாக, எதிர்காலத்தில் இதுமாதிரியான துன்பியல் சம்பவங்களைத் தடுப்பது எப்படி? என்பதற்கு நற்பயன் அளிக்கக்கூடிய ஆராய்ச்சியை வளர்த்தெடுப்பதற்கும் செலவுச் செய்யப்படுவதற்கும் எம்முடைய மனசாட்சியைத் தூண்டிவிடும்.

அன்புத் தாயே! நாங்கள் அனைவரும் மிகப்பெரிய குடும்பத்தின் உறுப்பினர்களே என்பதை உணர்ந்திடவும் எம்மை இணைக்கும் இந்த உறவை அங்கீகரிப்பதற்கும் எமக்கு உதவியருளும். இதனால் சகோதரத்துவம் மற்றும் தோழமை உணர்வில், எண்ணிறந்த ஏழ்மை மற்றும் நெருக்கடி சூழ்நிலைகளைக் குறைக்கவும் மட்டுப்படுத்தவும் நாங்கள் உதவ முடியும். இறைநம்பிக்கையில் உறுதியாக இருக்கவும் தொண்டாற்றுவதில் விடாமுயற்சியுடன் செயலாற்றவும் செபத்தில் நிலைத்திருக்கவும் எம்மை தயார்படுத்தும்.

துயருறுவோரின் ஆறுதலே! அன்னை மரியே! துன்பத்தில் வாடும் உம் பிள்ளைகள் அனைவரையும் அரவணைத்தருளும். எங்கள் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்பும் வண்ணம், இறைவன் தம் வல்லமையான கரத்தை நீட்டி, இந்த பயங்கரமான நோய் பெருந்தொற்றிலிருந்து எம்மை விடுவிக்க மன்றாடியருளும். ஆமென்.

எம் பயணத்தில் மீட்பு மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக நீர் எப்போதும் ஒளிர்கின்ற உம்மிடம் எம்மையே ஒப்படைக்கிறோம். கருணையின் உருவே, தாய்மையின் கனிவே, இனிமைத் தருவே, கன்ன மரியே! ஆமென்.

**ஆதாரம்: நம்வாழ்வு வார இதழ்**

**Owned and Published by Fr. A. CHINNAPPARAJ, OSM from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. A. CHINNAPPARAJ OSM.**







## பதிப்பாசிரியர் பக்கம்



# ஊரடங்கு

அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச.,
ஜோதி மாதா ஆலயம், சென்னை.

**இறைஇயேசுவில் அன்புநிறை அன்னைமரி பக்தர்களே!**

மே மாதத்திலே விடுமுறை, வீடுகளிலே சுபவைபவங்கள், சுற்றுலா மற்றும் விழாக்கள் என்று பல திட்டங்களை நாம் வகுத்து வைத்திருந்திருக்கலாம். ஆனால் இன்று அவையனைத்தும் இல்லாமல் போகக் காரணம் வேகமாக நம்மிடையே பரவிவரும் கொரோனா வைரஸ் ஆகும். இதனால் இன்று மக்களின் நலன் கருதி 144 என்னும் ஊரடங்கு சட்டமானது உலகம் முழுவதும் பல்வேறு வகைகளில் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. உயிருக்கு பயந்து பலரும் வீட்டுக்குள்ளேயே முடங்கி இருக்க ஒருசிலர் மட்டும் மக்களின் நலனுக்காக அயராது தங்கள் உயிரையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் தன்னலமின்றி பாடுபட்டு வருகின்றனர். இவர்களில் மருத்துவர்களும் செவிலியர்களும் முதன்மையான இடத்தை வகிக்கின்றனர்.

இன்று பலராலும் சொல்லப்படுகின்ற வார்த்தை, ‘இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையை என் வாழ்க்கையிலே பார்த்ததே கிடையாது’ என்பதாகும். ஊரடங்கானது ஒரு வகையில் உறவுகளை வளர்த்தெடுக்கவும், புரிந்துகொள்ளவும், மதிக்கவும் கற்றுத்தருகிறதென்றாலும் பல தர்மசங்கடமான நிலைக்கும் நம்மை ஆளாக்கியிருக்கின்றது. கல்வி, தேர்வு, வீட்டு வாடகை, மாதம்தோறும் கட்ட வேண்டிய தவனத்தொகை, வேலை போன்றவற்றைப் பற்றிய நம் கவலைகள் இன்னும் அதிகமாகிக்கொண்டுதான் இருக்கிறது.

ஊரடங்கானது மிகவும் கடுமைப்படுத்தப்பட்ட நிலையில் அனைவராலும் கடைபிடிக்கப்பட்டாலும் அரசியல் தலைவர்கள், சமூகநலனில்

## உள்ளே...

| | |
|---|---|
| மரியாளோடொரு ஒரு மலைப்(புப்)பயணம் | - 05 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| இன்றைய பெண்களில் அன்னை மரியா | - 13 |
| திருத்தந்தையின் தேவ தாய்ச் சிந்தனைகள் | - 16 |
| மகிழ்ச்சிநிறை பேருண்மைகள் | - 19 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 20 |
| காலங்களில் வசந்தம் நீயே அம்மா! | - 27 |
| அன்னை மரியாவின் மகிமைகள் | - 29 |
| விவிலிய வினாவிடை | - 30 |
| வணக்க மாதம் | - 32 |

அக்கறையுள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்கள், தனிப்பட்ட நபர்கள் என்று பலவகைப்பட்ட மனிதர்களும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் சென்றடைய அயராது பாடுபட்டு உழைக்கின்றனர். நாம் ஊரடங்கினால் வீட்டிற்குள்ளேயே முடங்கி இருந்தாலும் நம் தெருக்களில் காய்கறிகள், பழங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களும், உணவு மற்றும் மருந்து என்று அனைத்து அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன. ஆனாலும் இந்த அத்தியாவசியத் தேவைகள் அனைவரிடமும் சென்றடையவில்லை என்பது நிதர்சனமான உண்மை. இன்று பலரும் ஒருவேளை உணவுக்காக அடுத்தவரின் கருணையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஏனெனில் வேலைக்கு செல்ல முடியாத காரணத்தினால் சம்பளம் கிடையாது. இதனால் பல தற்கொலைகள் அரங்கேறியதும் நாம் அறிந்த ஒன்று.

இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஆதித்திருஅவையில் அன்னை மரியாவும், திருத்தூதர்களும், சீடர்களும் சந்திக்க நேரிட்டது. ஆண்டவர் இயேசு இறந்த பின்பு அவர்கள் அனைவரும் யூதர்களுக்கு அஞ்சி கதவுகளைப் பூட்டிக்கொண்டு வீட்டிற்குள்ளேயே இருந்தனர் (யோவான் 20:19). இப்படிப்பட்ட நிலையில் ஆண்டவர் அவர்களை தனித்து விட்டுவிடவில்லை. உயிர்த்த பின்பு அவர்களுக்குப் பலமுறை தோன்றி அவர்களை நம்பிக்கையில் திடப்படுத்தினார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தாலும் இயேசு அவர்களுக்குத் தோன்றி தம்மைக் காண்பித்து அவர்களை உறுதிபடுத்தினார் (லூக்கா 24:34; யோவான் 20:19; 21:1-2; 20:26-29). மேலும் திருத்தூதர்கள் அன்னை மரியாவோடு செபத்தில் ஈடுபட்டிருந்தபோது தம் துணையாளரான தூய ஆவியாரை அவர்கள்மேல் நெருப்பு வடிவில் பொழிகின்றார் (திப 2:1-5). இவ்வாறாக அவர்களை தனித்து விட்டுவிடாமல் இறைவன் அவர்களோடு என்றும் இருக்கின்றார் என்ற உடனிருப்பை ஆழமாக விளக்குவதாக இந்நிகழ்வுகள் அமைந்திருக்கின்றன.

இன்று ஊரடங்கினால் நாம் வீட்டிற்குள்ளேயே இருந்தாலும், பல இக்கட்டான சூழ்நிலைகளை சந்திக்க நேர்ந்தாலும், அத்தியாவசியப் பொருட்கள் நமக்கு இல்லாமல் போனாலும் இறைவன் நமக்கு உறுதுணையாக என்றும் இருக்கின்றார் என்ற நம்பிக்கையில் நாம் ஒருபோதும் தளர்ந்துபோகாமல் இருக்க வேண்டும். ‘உலக முடியும்வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன்’ (மத் 28:20) என்று மொழிந்த இயேசு இன்றும் நம்மோடு உடன் பயணிக்கிறார் என்பதை உணர வேண்டும். அன்னை மரியாவின் மாதமாகிய இந்த வணக்க மாதத்திலே அவரது பரிந்துரையை நாடுவோம். இடைவிடாமல் செபமாலை செபிப்போம். அன்று பூட்டிய அறையிலே இயேசு அவர்களுக்குத் தோன்றி அவரோடு இருந்ததுபோல இன்று நம் வீட்டிற்கும் இறைவன் வரவேண்டுமெனில் நாம் செபத்தில் நிலைத்திருக்க வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து குடும்ப செபமாலை சொல்வோம். இவ்வாறு நாம் இருக்கின்றபோது நமக்கு ஆண்டவரது ஆசியும் தூய ஆவியாரின் துணையும் கிடைப்பதோடு நமது இந்த இக்கட்டான சூழ்நிலையும் விரைவில் நம்மைவிட்டுக் கடந்துபோக வழிவகுக்கும். இத்தகைய அசைக்க முடியாத நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் இறைவனிடம் அன்னை மரியா வழியாக செபமாலை செபித்து மன்றாடுவோம். இறைவன் நம் அனைவரையும் நிறைவாக ஆசிர்வதிக்க அன்னை மரியா தொடர்ந்து நமக்காக என்றும் அவரது திருமகனிடத்திலே பரிந்துபேசுவாராக!





## அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு – 1

ஓ அன்னை மரியே!
எம் பயணத்தில் மீட்பு மற்றும் நம்பிக்கையின்
அடையாளமாக நீர் எப்போதும் ஒளிர்கின்றீர்,
சிலுவை அடியில், இயேசுவின் துன்பத்தில் ஒன்றித்திருந்து,
உமது நம்பிக்கையில் நிலைத்திருந்தவரே!
நோயாளிகளின் ஆரோக்கியமே!
எங்களையே நாங்கள் உம்மிடம் ஒப்படைக்கின்றோம்.
அனைத்துலக மக்களின் அரணானவளே!
எம் தேவைகளை நீர் அறிந்திருக்கிறீர்;
அவற்றை நீர் எங்களுக்கு வழங்குவீர் என்பதை
நாங்கள் அறிந்திருக்கிறோம்.
ஆகையால், கலிலேயாவில் உள்ள கானாவில் நடந்ததுபோல
இந்தத் துன்ப காலத்திற்குப் பிறகு,
மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் திரும்புவதற்கு உதவும்.
சிலுவையின் வழியாக உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு
எம்மை வழிநடத்துவதற்கு எம்முடைய துன்பத்தை
இயேசுவே தம்மேல் ஏற்றுக்கொண்டார்;
எம்முடைய துயரங்களை அவர்தாமே சுமந்தார்.
தெய்வீக அன்பின் தாயே!
தந்தையின் திருவுளத்திற்கு நாங்கள் இணங்கிடவும்
இயேசு எமக்கு சொல்வதை செய்திடவும்
எமக்கு உதவும். ஆமென்.
ஓ! இறைவனின் புனித அன்னையே!
உம்முடைய பாதுகாவலில் நாங்கள் தஞ்சம் அடைகிறோம்.
ஓ! மகிமைமிகு புனித கன்னியே!
எம்முடைய தேவைகளில் எம்முடைய விண்ணப்பங்களை புறக்கணியாமல்
ஒவ்வோர் ஆபத்திலிருந்தும் எப்போதும் எம்மை விடுவித்தருளும்.

## அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு – 2

ஓ! இறைவனின் புனித அன்னையே! உம்முடைய பாதுகாவலில் நாங்கள் தஞ்சம் அடைகிறோம். துயர்மிக்க இன்றைய சூழ்நிலையில், ஒட்டுமொத்த உலகமும் துன்பத்திற்கும் கவலைக்கும் இரையாக்கப்படுகிறபோது, இறைவனின் தாயே, எம் அன்னையே! உமது பாதுகாவலில் நாங்கள் அடைக்கலம் தேடுகிறோம்.

கன்னி மரியே! கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுக்கு நடுவில் உம்முடைய கருணைமிக்க கண்களை எம்மீது திருப்பியருளும். மிகுந்த கலக்கமடைந்துள்ளவர்களையும் தாங்கள் மிகவும் அன்பு செய்தவர்களைப் பறிகொடுத்தும் அதே நேரம் அவர்களை மிகவும் பாதிக்கும் வகையில் அடக்கம் செய்து, கலக்கமடைந்து, அழுது புலம்புபவர்களைத் தேற்றியருளும். தாங்கள் நேசிப்பவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிறபோது, நோய்த்தொற்று பரவாமல் இருப்பதைத் தடுக்கும்பொருட்டு, அவர்களுக்கு அருகே இருக்கமுடியாமல் கவலையில் தோய்ந்திருப்பவர்களுக்கு அருகில் நீர் இருந்தருளும். எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மையாலும் பொருளாதாரப் பின்னடைவு மற்றும் வேலையின்மை ஆகியவற்றின் விளைவுகளாலும் துன்பத்திற்குள்ளாகியிருப்போரை நம்பிக்கையால் நிரப்பியருளும். இறைவனின் தாயே! எம்முடைய அன்னையே! இந்தப் பெருந்துன்பம்

# வணக்க மாதம்

அன்னை மரியாவின் வணக்க மாதம் 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கப்பட்டது. ஆனால் அது 17 ஆம் நூற்றாண்டில்தான் இயேசு சபையால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டது. 1859 ஆம் ஆண்டு திருத்தந்தை 9 ஆம் பயஸ் இப்பக்தி முயற்சியில் ஈடுபடுவோருக்கு பரிபூரண பலனை வழங்கினார்.

1965 ஆம் ஆண்டு திருத்தந்தை 6 ஆம் பவுல் அமைதிக்காக செபிக்க மரியாவின் மாதத்தை பயன்படுத்த அறிவுறுத்தி சிறிய சுற்றுமடலை வெளியிட்டார். 2002 ஆம் ஆண்டு திருத்தந்தை 2 ஆம் ஜான் பால் மே மாதத்தை 'மரியாவின் மாதமாக' பல்வேறு பக்தியான வழிபாடுகளோடும், மறைக்கல்வியோடும் கொண்டாட அழைப்பு விடுத்தார்.

**2020 மே மாதத்திற்கான கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மடல்**

அன்னை மரியாவுக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள மே மாதத்தில், இல்லங்களில் செபமாலை செபிப்பதன் அழகைக் கண்டுணருமாறு அனைத்து கத்தோலிக்கருக்கும் அழைப்புவிடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மே மாதம் அண்மித்து வருவதை முன்னிட்டு, உலகின் அனைத்து விசுவாசிகளுக்குமென, ஏப்ரல் 25 சனிக்கிழமையன்று மடல் ஒன்றை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொரோனா தொற்றுக்கிருமி பரவல் விதிமுறைகளால், வீடுகளிலேயே தங்கியிருக்கும் நாம், கிடைக்கின்ற வாய்ப்பை அதிகம் பயன்படுத்தி, வருகின்ற மே மாதத்தில் இல்லங்களில் செபமாலை செபிப்பதன் அழகை மீண்டும் கண்டுணர்வோம் என்று கூறியுள்ளார்.

மே மாதத்தில் இறைமக்கள் அனைவரும், அன்னை மரியா மீது தங்களுக்குள்ள ஆழ்ந்த அன்பையும் பக்தியையும் சிறப்பாக வெளிப்படுத்தும் விதமாக செபமாலை செபித்து வருகின்றனர் என்று கூறியுள்ள திருத்தந்தை, இந்த கொள்ளை நோய் காலத்தில் சூழ்நிலைக்கேற்ப தனியாக அல்லது சேர்ந்து செபமாலை செபிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

செபமாலை செபிப்பதற்கு வலைதளத்திலும்கூட நல்ல வழிமுறைகள் உள்ளன என்று கூறியுள்ள திருத்தந்தை, 'செபமாலையின் முடிவில் அன்னை மரியாவை நோக்கி செபிப்பதற்கு உதவியாக இரு செபங்களையும் விசுவாசிகளுக்கென வழங்கியுள்ளேன்' என்றும், 'நானும் வருகிற மே மாதத்தில் உங்களோடு ஆன்மீக முறையில் இணைந்து இச்செபங்களை செபிப்பேன்' என்றும் கூறியுள்ளார்.

நம் அன்னையாம் மரியாவின் இதயத்தோடு இணைந்து கிறிஸ்துவின் திருமுகத்தை தியானிக்கும்போது அது நம்மை ஒரே ஆன்மீகக் குடும்பமாக ஒன்றிணைக்கும் மற்றும் இப்போது நாம் எதிர்கொள்ளும் கொரோனா சோதனையை வெல்வதற்கு உதவும் என்றும் திருத்தந்தை தன் மடலில் குறிப்பிட்டுள்ளார். 'நானும் உங்களுக்காக குறிப்பாக மிகவும் துன்புறும் மக்களுக்காக சிறப்பாக செபிக்கிறேன். நீங்கள் எனக்காகவும் செபியுங்கள். உங்கள் அனைவருக்கும் எனது நன்றியும் ஆசியும்' என்று கூறி இம்மடலை நிறைவு செய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தையின் இந்த எளிய அழைப்பினை ஏற்று நாம் அனைவரும் குடும்பமாக இணைந்து திருச்செபமாலை சொல்வோம், வெற்றிவாகை சூடுவோம்.







# மரியாளோடொரு மலைப்(புப்)பயணம்

13

அருள்பணி. ஜான் ரொன்காலி ம.ஊ.ச.
ஜெகன் மாதா பிரையரி, திருச்சி.

## திருஅவையின் திருப்பயணத்தில் அன்னை மரியாள் (திருஅவைத் தந்தையர்களின் பகிர்வுகளில் – 4)

**புனித அகுஸ்தினாரின்** அனைத்து விசுவாசப் பகிர்வுகளிலும் மரியாளின் மிக முக்கிய செய்தியான "முன்குறிக்கப்பட்ட நிலை" (Predestination) குறித்து அவர் விளக்கும் கருத்துக்கள் மிக அழகானவை. அதோடு, அன்னை மரியாளின் "இறைத்தாய்மை" எனும் கொடையோடு தொடர்புடைய அவரது புனிதமானது சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒன்று.

பெலாஜியுஸ் எனும் ஒரு அறிஞர் கிறிஸ்தவரின் புனித வாழ்வுகுறித்துப் பேசுகையில், "ஆதிப்பாவத்தின் எந்தவித பாதிப்புமின்றி ஒரு மனிதனால் அவரது தனிப்பட்ட முயற்சியினால் வாழ்ந்திட முடியும்" என்றும், அதேபோல "இறைவனின் அருளின்றி ஒருவர் தனது முயற்சியினால் புனிதராக வாழ்ந்திட முடியும்" என்றும் கற்பித்திருந்தார். இவருக்குப் பதிலளிக்கும் விதமாக புனித அகுஸ்தினார் தனது ஆழமான விசுவாசக் கருத்துக்களைப் பகிர்ந்தார்.

❖ **இறையருளின் அவசியம்**

மீட்பின் அனுபவத்தில் எந்தவொரு நபரும் இறையருளின் துணையின்றி தனது தனிப்பட்ட முயற்சியினாலோ, உழைப்பினாலோ மீட்பினை பெற்றுவிட முடியாது. மீட்பு இறைவனால் தானாக முன்வந்து கொடுக்கப்படும் ஒரு ஆச்சரியமான கொடை. இந்த நியதியிலிருந்து வார்த்தையான மீட்பரும்கூட விலக்குப்பெறவில்லை. ஏனெனில் இறைவனின் திட்டத்தில் அனைத்துமே முன்குறிக்கபட்டவை. மீட்பும், மீட்பின் அனுபவங்களும்கூட. அன்னை மரியாளும் அன்பிறைவனால் மீட்பின் நிகழ்வுகளுக்காக முன்குறிக்கப்பட்டவள். அன்னை மரியாளுமே கூட தேர்ந்தெடுக்கப்பட்டதனால்தான் தகுதிபெற்றாரேயொழிய, அவரது தனித்தகுதியினால் தேர்ந்தெடுக்கபடவில்லை.

அன்னையின் தாய்மைப் பணிக்காக ஆண்டவரால் முன்குறிக்கப்பட்டதோடு, இம்மாபெரும் திருப்பணிக்காக முன்பே பாவமாசுகள் ஏதுமின்றி காக்கப்பட்டவளாகவும் இருக்கின்றாள். அவ்விடத்திலே அனைவருக்கும் முன்பாக அன்னையை இயேசு

உயர்த்தினாலும், காலங்களுக்கு முன்பே அன்னையை அவர் அறிந்திருந்தார் என்பதே உண்மை. யோவான் 19,25—27ல் நாம் காண்பதுபோல, மீட்பராம் இயேசுவின் சிலுவையடியில் நின்றுகொண்டிருந்தபோது நடந்த நிகழ்வுகள் அழகானவை. இறைவனின் மீட்பின் திட்டம் முழுமையாக நிறைவேற ஒத்துழைக்கும் பெருமையை உதாரணமாகக்காட்டி, அந்த இடத்தில் இயேசுவின் சீடரைத் தன் மகனாக ஏற்றதோடு, அவரது உறவிலே தான் இணைந்ததும் மிகமிக அழகான அருளின் அனுபவம்.

❖ **காலங்களுக்குமுன்பே புனிதையாக முன்குறிக்கப்பட்டவள் அன்னை மரியாள்**

இந்த பரஸ்பர அன்புப் பகிர்வுமூலம், அகில உலகத் திருஅவையின் பிறப்புக்கும் அன்னை மரியாளே தாயாகவும், தனிப்பெரும் பாதுகாவலியாகவும் உயர்த்தப்படுகிறாள் என உருவகிக்கின்றார். இவையனைத்துமே காலங்களுக்குமுன்பே கடவுளால் முன்குறிக்கப்பட்டவை. அன்னை மரியாளின் எந்தவொரு தனித்தகுதியும் அல்ல மாறாக அத்தனையும் இறையருளின் கிருபையே என்று தெளிவாக அகுஸ்தினார் விளக்குகின்றார். அன்னை தனது முழு உள்ளம், முழு ஆன்மா, முழுமனதோடு இறைத்திட்டத்திற்கு பணிந்ததே அவரது பெருமை.

தனது விசுவாச வாழ்வின் தந்தையான புனித அம்புரோசியாரைப்பின்பற்றி, புனித அகுஸ்தினாரும் அன்னை மரியாளின் முழுமையானப் புனிதத்தை தனக்கேயுரிய உறுதியோடு விவரிக்கின்றார். அன்னை மரியாள் அவரது இறைத்தாய்மையின் நோக்கத்திற்காக ஆதிநிலைப்பாவமாசுகள் ஏதுமின்றி காக்கப்பட்டதோடு, அவரது இவ்வுலக வாழ்விலும்கூட எந்தவித பாவமும் அணுகாத புனிதையாகவே வாழ்ந்து சிறந்தாள். ஏனெனில் பாவத்தை வென்றிட இப்பாரில் அவதரித்த மீட்பரான பரிசுத்தரைப் பெற்றெடுக்கப் பேறுபெற்ற அன்னை, தானும் பாவமாசுகள் ஏதுமின்றி வாழ்ந்து சிறந்தாள் என்கிறார்.



அன்னை மரியாளின் புனிதத்தின் அழகை விவரிக்கையில், அன்னையின் எப்போதும் கன்னி எனும் மணிமுடியை





13) யாருடைய் மூச்சால் பனிக்கட்டி உறையும்; பரந்த நீர்நிலை உறைந்து போகும்?

14) கடலின் ஊற்றுவரை நீ உலவினதுண்டோ? ஆழியின் அடியில் நீ போனதுண்டா? வசனத்தை சரியாக எழுதவும்.

15) அப்படியிருக்க, புழுவைப்போன்ற ------------------- எத்துணைத் தாழ்ந்தவர்! பூச்சி போன்ற ------------------ எவ்வளவு குறைந்தவர்!

16) வெற்றிடத்தில் வடபுறத்தை அவர் விரித்தார்; காற்றிடையே எதை தொங்கவிட்டார்?

17) வீண் வேண்டலை இறைவன் கண்டிப்பாய்க் கேளார்; எல்லாம் வல்லவர் அதைக் கவனிக்கவும் மாட்டார். இது எந்த அதிகாரம், எந்த வசனம்?

18) வளமையால் நெறிதவறாதேயும். நிறைந்த கையூட்டால் வழிபிறழாமல் பார்த்துக்கொள்ளும். வசனத்தை சரியாக எழுதவும்.

19) என் உடலில் உயிர் இருக்கும்வரை, என் மூக்கில் கடவுளின் மூச்சு இருக்கும்வரை, இதற்கு அடுத்த வசனத்தை எழுதவும்

20) அவர் மானிடர்க்குக் கூறினார்: ஆண்டவர்க்கு அஞ்சுங்கள்; அதுவே -------------- தீமையை விட்டு விலகுங்கள்; அதுவே --------------.

**சென்ற மாதத்தின் விடைகள்:** ***யோபு 1-20***

**1.** 20:23; **2.** 11:7; **3.** 1:12; **4.** 15:33; **5.** 19:7; **6.** 3:11; **7.** 16:10; **8.** 2:9; **9.** 10:9; **10.** 18:5; **11.** 8:20; **12.** 4:6; **13.** 12:2; **14.** 17:16; **15.** 5:15; **16.** 14:12; **17.** 7:17; **18.** 13:12; **19.** 9:5; **20.** 6:14.

**அன்பார்ந்தவர்களே! தயவுசெய்து உங்கள் விடைத்தாள்களோடு முழு முகவரியையும் முடிந்தால் உங்களது அலைபேசியையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.**

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-05-2020

முகவரி

**The Editor**
**Appadiye Agattum**
**5/301, Matha Koil Street**
**Rajiv Gandhi Road**
**Okkiampet, Chennai - 97**



# விவிலிய வினா விடை

**மே 2020**

**யோபு 21-42**

ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

1) ‘உன்மீதும், உன் இரு நண்பர்கள்மீதும் எனக்குச் சினம் பற்றி எரிகிறது. ஏனெனில் என் ஊழியன் யோபு போன்று நீங்கள் என்னைப்பற்றிச் சரியாகப் பேசவில்லை’. இதைக் கூறியது யார்?

2) அகிலத்தில் அதற்கு இணையானது இல்லை: அச்சம் கொண்டிலாப் படைப்பு அதுவே. அது எது?

3) தீயோர்க்கு வருவது கேடு அல்லவா? கொடியோர்க்கு வருவது அழிவு அல்லவா? வசனத்தை சரியாக எழுதவும்.

4) உண்மையில் எல்லாம் வல்லவரின் மூச்சே, மனிதரில் இருக்கும் அந்த ஆவியே ------------------ அளிக்கின்றது?

5) தீயோர் ------------------? நீண்ட ஆயுள் ------------------? வலியோராய் வளர்வதேன்?

6) இணங்குக இறைவனுக்கு; எய்துக அமைதி; அதனால் உமக்கு என்ன வந்தடையும்?

7) இதோ காண், அதன் ஆற்றல் அதன் இடுப்பில்; அதன் வலிமை வயிற்றுத் தசைநாரில். எதன் ஆற்றல்?

8) காட்டெருமை உனக்கு ஊழியம் செய்ய விரும்புமா? உன் தொழுவத்தில் ஓர் இரவேனும் தங்குமா? இது எந்த அதிகாரம், எந்த வசனம்?

9) மாந்தரிடமிருந்து தீவினையை அகற்றுகின்றார். மனிதரிடமிருந்து ஆணவத்தை நீக்குகின்றார். வசனத்தை சரியாக எழுதவும்.

10) கொடுமை புரிவோர் தங்களை ஒளித்துக்கொள்ள ------------------ இல்லை; இறப்பின் ------------------ இல்லை.

11) ஆயினும் நான் போகும் வழியை அவர் அறிவார்; என்னை அவர் புடமிட்டால், நான் எதுபோல் துலங்கிடுவேன்?

12) வறட்சியும் வெம்மையும் பனிநீரைத் தீய்க்கும்; தீமை செய்வோரைப் பாதாளம் விழுங்கும். இது எந்த அதிகாரம், எந்த வசனம்?





அணிவிக்கின்றார். அன்னை மரியாள் கன்னியாக தன் மகனைக் கருத்தரித்தாள், கன்னியாக அம்மகனைப் பெற்றெடுத்தாள், எப்போதும் கன்னியாகவே இருக்கின்றாள் என்கிறார். இவ்வுண்மை அக்காலத்தின் கிறிஸ்தவ விசுவாசத்தின் விளக்கமாகவும் அமைந்தது. விசுவாசிகள் எவ்வித சஞ்சலமுமின்றி மெசியாவான இயேசு கன்னி மரியாளிடம் பிறந்தார் என்பதனை முழக்கமிட அகுஸ்தினாரின் படிப்பினைகள் நிறையவே உதவின.

❖ **அன்னை மரியாள் திருஅவையின் மாதிரி**

அகுஸ்தினாரின் இன்னொரு கருத்தும் திருஅவையிலே மிகமுக்கியமான படிப்பினையாக இருந்தது. அன்னை மரியாளையும் திருஅவையையும் இவர் ஒப்பிட்டு விவரிக்கும் அழகு தனித்துவம் வாய்ந்தது. மரியாளை திருஅவையின் “மாதிரி” என்று கூறுகின்றார். திருஅவையானது தனது நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் என்னவாக இருக்குமோ அதனை இவ்வுலகிலேயே காலத்தில் வாழ்ந்து சிறந்தவள் அன்னை மரியாள். கிறிஸ்துவிலிருந்துதான் திருஅவை உருவாகியிருந்தாலும், திருஅவையே கிறிஸ்துவின் தாயும்கூட, இதனையே அன்னை மரியாளும்கூட பிரதிபலிக்கின்றாள். மீட்பரால் காலங்களுக்குமுன்பே குறிக்கப்பட்டிருந்தாலும், காலத்தின் நிறைவிலே அவரைப்பெற்றெடுத்து, மீட்பின் அத்தனை அனுபவங்களிலும் உடனிருந்து, இறுதியில் அவரது மாட்சியிலே அதிமிகுமகிமையிலே அன்னை மரியாள் பங்குபெறுவதுபோல, அன்னையாம் திருஅவையும் மீட்பருக்காக மனுக்குலத்தைத் தாங்கிப்பெற்றெடுத்து, மாட்சியைநோக்கி நடக்கின்றது.

அன்னை மரியாள் திருஅவையிலிருந்து தனித்திருக்கவில்லை. மாறாக இயேசுவைப் பெற்றெடுத்த தாயாகவேயிருந்தாலும், கிறிஸ்துவின் திருவுடலாகிய திருஅவையில் அவரும் ஒரு உறுப்பினராகவும் திகழ்கின்றாள். “மரியாள் திருஅவையின் தனிச்சிறப்புவாய்ந்த ஒரு உறுப்பினர், புனிதமான உறுப்பினர், முதன்மையான உறுப்பினர், முழுமையான உறுப்பினரும்கூட” என்கிறார்.

❖ **அன்னை மரியாள் அர்ப்பணமேற்றிருப்போரின் மாதிரி**

இறைவனுக்காகத் துறவறத்தில் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட கன்னியர்கள், தங்களது அர்ப்பண வாழ்க்கைக்கு அன்னை மரியாளை முழுமுதல் மாதிரியாகக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். அன்னை மரியாள் இல்லாமல் கிறிஸ்தவ துறவற வாழ்க்கையில் தூயகன்னிமை அர்த்தம் பெற முடியாது.

அதே நேரத்தில் திருமண வாழ்விலிருக்கும் பெண்களுக்கும் அன்னை மரியாள் ஒரு ஆக்கப்பூர்வமான முன்மாதிரியாக இருக்கின்றாள் என்கிறார். ஏனெனில் கன்னி மரியாள் தனது கணவரான சூசைக்கு அன்பும், கனிவும், கண்ணியமுமுள்ள மனைவியாகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டாள் என்று அகுஸ்தினார் பகர்கின்றார்.

கிறிஸ்தவ விசுவாசத்தின் சாரங்களைப்பற்றியும், குறிப்பாக நமக்கு அவசியமான அன்னை மரியாளைப்பற்றியும், புனித அகுஸ்தினார் விளக்கிய, விவரித்த

கருத்துக்கள் மிகவே அழகானவை, ஆழமானவையும் கூட. அக்காலத்தில் வரலாற்றில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்ட எபேசு பொதுச்சங்கத்திற்கு புனித அகுஸ்தினாரும் அழைப்புப் பெற்றிருந்தார் (கி.பி.431).




"அன்னை மரியாள் இறைவனின் தாய்" என்ற மறைக்கோட்பாடு வறையறுக்கப்பட்டு விசுவாச மறைக்கோட்பாடாக பிரகடனப்படுத்தப்பட்ட பொதுச்சங்கம் இதுதான். ஆனால் அதற்கு சற்றுமுன்னே கி.பி 430ல் அகுஸ்தினார் இறையடி சேர்ந்தார். ஆதித்திருஅவையின் விசுவாச சத்தியங்களைத் தொடக்க காலத்திருஅவையில் மக்களுக்குப் புரியும் வகையில் வாதங்களோடும், புரியும்படியும் எடுத்துரைத்த திருஅவைத் தந்தையர்கள் வரிசையிலே புனித அகுஸ்தினார் மிகவும் முக்கியமானவர். எபேசு பொதுச்சங்கத்தில் மிகமுக்கிய பங்குவகித்த தந்யைர்களான அலெக்சாந்திரியா நகர் சிரில் மற்றும் நெஸ்டோரியஸ் இருவரின் கருத்துக்களிலுமுள்ள சாதக பாதக அம்சங்களைத் தெளிவுபடுத்தி, ஒரு தீர்க்கமான முடிவுக்குத் திருஅவை வருவதற்கு இத்தந்தையர்களின் பிரசன்னம் அவசியமாயிருந்தது.

இன்று மரியியலின் வளர்ச்சிக்கும், மாட்சிக்கும் புனித அகுஸ்தினாரின் பங்களிப்பு மிகவே அதிகம். அன்னை மரியாளின் காலங்களுக்கு முன்பே முன்குறிக்கப்பட்ட நிலை, இறைத்தாய்மை, முப்பொழுதும் கன்னிமை, தன்னிகரில்லா தூய்மை, ஆதிப்பாவம் மட்டுமல்ல, கர்மப்பாவங்களின் நிழல்கூட அணுகமுடியாதவாறு இறையருளால் காக்கப்பட்ட பெருமை, கன்னிமை வாழ்க்கையை மேற்கொள்பவர்களுக்கு மட்டுமல்ல, திருமணத்தின் வழியாய்க் குடும்ப வாழ்க்கையில் இருப்போருக்கும் அழகான முன்மாதிரியான அன்னை திகழ்கின்றாள் என்ற அழகியல் கருத்துக்களை ஆணித்தரமாக பயிற்றுவித்தவர் புனித அகுஸ்தினார்.

இனி திருஅவைத் தந்தையர்களின் இறுதிக்கால இலக்கியத்தில் அன்னை மரியாள். அவை அடுத்து. . .

**பயணம் தொடரும்...**





# அன்னை மரியாவின் மகிமைகள் ②

அருள்பணி. ஆனந்தா லூர்து ராஜ், ஜெகன் மாதா பிரையரி, திருச்சி

**3. என்றும் கன்னி (Perpectual Virginity)**

புனித அகுஸ்தினார் மரியா கன்னிமையில் இயேசுவைக் கருவுற்று, ஈன்றெடுத்த நிகழ்வை பின்வருமாறு கூறுகிறார்: 'கன்னி விசுவசித்தார், விசுவசித்துக் கருவுற்றார். கிறிஸ்துவை உடலில் கருத்தரிக்குமுன் உள்ளத்தில் கருத்தரித்தார். அவர் உடலில் இருக்கும் கிறிஸ்துவைவிட அவர் உள்ளத்தில் இருக்கும் கிறிஸ்து மேலானவர். கிறிஸ்துவை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே அவர் கிறிஸ்துவால் உருவாக்கப்பட்டார்' என்கிறார். எனவே மரியாவின் விசுவாசக் கீழ்படிதலே அவர் கன்னிமையில் கடவுளுக்கு மனித உருக்கொடுக்கக் காரணமாயிருந்தது.

கன்னிமையில் மரியா இயேசுவை ஈன்றெடுத்ததைப்பற்றி புனித அகுஸ்தினார் பின்வருமாறு கூறுகிறார்: 'வியப்படையுங்கள், ஏனெனில் ஒரு கன்னி கருவுற்றிருக்கிறார். மேலும் வியப்படையுங்கள்; ஏனெனில் கன்னி ஒரு குழந்தையை ஈன்றுள்ளார். குழந்தையை ஈன்ற பின்னும் அவர் கன்னியாகவே இருக்கிறார். என்ன வியப்பு! என்ன புதுமை! புதுமையினும் புதுமை!' கன்னிமையில் இறைமகன் இயேசுவை ஈன்றெடுத்த புதுமையை குளத்தூர் கவிஞர் வேதநாயகம் பின்வருமாறு பாடுகிறார்:

நல்ல புதுமை இது நான் எங்கும் கண்டதில்லை
சொல்லரிய ஒரு கன்னி சூலாகித் — தொல்லுலகில்
தன் அப்பனைப் பெற்றுத் தாய்மகள் என்று ஆனாள்
என்னப்பா காட்சி இது!

மரியாவிடம் நிகழ்ந்த புதுமையைப்போல் வேறெங்கும் நான் கண்டதில்லை. ஒரு கன்னி கருவுற்று அதுவும் தன்னைப் பெற்ற கடவுளையே ஈன்றெடுத்து இறைவனுக்கு மரியா ஒரே நேரத்தில் தாயாகவும், மகளாகவும் திகழ்கின்றார் என்று வியப்பில் மூழ்குகிறார் கவிஞர்.

திருத்தந்தை 6 ஆம் சின்னப்பர் மரியாளின் கன்னிமை குறித்து சொல்கிறபோது, 'மரியா இயேசுவை ஈன்றெடுப்பதற்கு முன்பும், ஈன்றெடுக்கும்போதும், ஈன்றெடுத்த பின்பும் கன்னியாகவே இருந்தார் – Virginitas ante partum, in partum et post-partum)'. மரியா என்றும் கன்னி என்பது நமது கத்தோலிக்க விசுவாசமாகும்.

மரியாவின் கன்னிமையானது மோயிசன் கண்ட எரிந்தும் தீய்ந்துபோகாத முட்புதரோடு ஒப்பிடப்படுகின்றது (விப 3:2). மரியாவின் கன்னிமை ஒருபோதும் மாசுபடவில்லை. மரியாவிற்கு இயேசுவைத்தவிர எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் மற்றொரு பிள்ளை இருப்பதற்கு சாத்தியம் இல்லை என்பதை மாற்கு 6:3 மற்றும் யோவான் 19:26 – 27 உணர்த்துகிறது. எனவே இறைவன் மரியாவுக்கு என்றும் கன்னிமையில் இருந்து ஆண்டவருக்கு மட்டுமே உரியவராக வாழ்ந்த உன்னதமான மகிமையை காத்துக்கொண்டாள்.

**தொடரும்...**

அச்சத்தினால் அன்றாட வாழ்க்கை முறை
சிதைந்து கொண்டிருக்கிறது
அநேகர் இந்நோயின் பாதிப்பால் உயிரிழந்திருக்கின்றனர்
இந்நோயிலிருந்து மக்களை காக்க மருந்தேதும் இல்லை
மக்களை காக்கும் வல்லமை படைத்த மருத்துவர்
ஆண்டவர் ஒருவரே .... இவரது
இரக்கம் மிகுந்த பார்வை ஒன்றே இந்நோய்க்கு மருந்து
அவரின் பாதம் பற்றி ஆழ்ந்த நம்பிக்கையோடு
உலகிற்கு நலமருள மன்றாடுவோம்.
"நான் உன்னைவிட்டு விலகுவதில்லை
உன்னைக் கைவிடுவதுமில்லை"
என ஆறுதல் கூறும் ஆண்டவர்
அகிலம் அனைத்திற்கும் நலமருள்வார்,
அமைதியளிப்பார் என நம்புவோம்.

இயேசுவை .......
பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்த அன்னை
கல்வாரியில் இயேசுவால்
உலகிற்கே அன்னையாகத் தரப்பட்ட அன்னை
இறைபணியைத் தொடர்பவளாக
இகமதைக் காக்கும் அன்பு அன்னையாக
நம்முடன் வாழ்கிறார்
"மிகவும் இரக்கமுள்ள தாயே!" – என
புனித பெர்னார்து எழுதிய செபத்தில்
"உம்மால் கைவிடப்பட்டதாக உலகில்
ஒருபோதும் சொல்லக் கேள்விபட்டதில்லை
என்று நினைத்தருளும்" என்னும் செப வரிகள்
"அன்னையிடம் வேண்டிய எவரும்
ஏமாற்றம் அடைந்ததில்லை" – எனச் சொல்கின்றன
எனவே அவரின் பரிந்துரையை நாடுவோம்
தொடர்ந்து தினமும் செபமாலை செபிப்போம்
கொரோனாவிலிருந்து உலக மக்களைக் காக்க
அன்னையின் அரவணைப்பையும் பாதுகாப்பையும் வேண்டுவோம்
அன்னை நம்மை பாது காப்பார்.
'மே' மாத வசந்த அன்னையை
வாழ்த்துவோம் - வணங்குவோம் - நலம் பெறுவோம்
அவரில் மகிழ்ந்திருப்போம்.







# அன்னையின் திருத்தலங்களை நோக்கி... 17

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., திருச்சி.

## பராகுவே நாட்டு ககுபே நகர் அமல அன்னை

அகிலமெல்லாம் படைத்தவரின் பெயர் படிப்படியாக அனைவராலும் அறியப்பட்ட நேரத்தில், அவருக்கு மனுவுரு கொடுத்தவரின் பெயரை எங்ஙனம் அறியாமல் இருக்கமுடியும்? தென் அமெரிக்காவில் இருந்த பழங்குடி மனிதரை அறிந்து அவர்களிடத்தில் தங்கள் பிரசன்னத்தை நிறுவ முற்பட்ட ஐரோப்பிய குடியேறிகள் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தையும் தாங்கள் குடியேறிய பகுதியில் வாழ்ந்த மக்களோடு பகிர்ந்து கொண்டனர். ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள் கடற்கரைகளில் வந்திறங்கினர். எனவே, கடற்கரையோரம் இருந்த பிரதேசங்களில் அவர்களின் பணி விரைவாக நடைபெற்றது எனலாம். ஆனால், இக்கட்டுரையில் நாம் காணவிருக்கிற பராகுவே நாடு. இந்நாடு அர்ஜென்டினா, பிரேசில், மற்றும் பொலிவியா போன்ற நாடுகளால் சூழப்பட்ட ஒரு நாடாகும். பிரேசிலில் தோன்றி பராகுவே நாட்டின் தலைநகராம் அசுன்சியோன் நகர் வழியாய் பாய்ந்தோடும் பராகுவே நதிதான் தென்அமெரிக்காவின் தென்மத்தியப் பிரதான நதியாகும். இந்நதியானது பிரேசில், பொலிவியா, பராகுவே, அர்ஜென்டினா ஆகிய நாடுகளில் பாய்ந்து தான் கொண்டிருக்கின்ற வளத்தால் இந்நாடுகளையெல்லாம் வளப்படுத்துகிறது. இந்நதியோட்டத்தில்தான் மறைபரப்புப் பணியாளர்கள் பராகுவே நாட்டிற்குள் சென்றிருக்க வேண்டும்.

**பராகுவேயில் கிறிஸ்தவம்**

தென் அமெரிக்க நாடுகளில் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்டதற்கும், பரவுவதற்கும் காரணமாயிருந்தவர்கள் புதிய நாடுகளை கண்டறியப் புறப்பட்ட ஸ்பானியர்கள் என்பது நாம் அறிந்ததே. அந்த வகையில் கி.பி. 1524 ஆம் ஆண்டு அலெசியோ கிராசியா என்பவர் பராகுவே வந்தடைந்தார். அவருடன் வந்த மறைபரப்புப் பணியாளர்களின் பணியால் கிறிஸ்தவம் வளர்ந்து ஒரு மறைமாவட்டமாக வளரும் நிலையை அடைந்திருந்தது. இச்சூழலில், போதக சபையைச் (Order of Preachers) சார்ந்த அல்போன்ஸோ குவெர்ரா (Alfonso Guerra OP) என்பவரை திருத்தந்தை பதிமூன்றாம் கிரகோரி கி.பி. 1579 ஆம்

ஆண்டு பிப்ரவரி 6ஆம் தேதி பராகுவேயின் ஆயராக நியமித்தார். இவர் தனது ஆயர் பணிக்காலத்தில் இயேசு சபை அருட்பணியாளர்களை மறைப்பரப்புப் பணிக்காக பராகுவே நாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இயேசு சபையினரின் வருகை பராகுவே நாட்டின் கத்தோலிக்கக் கிறிஸ்தவ விசுவாத்தில் மக்கள் வளர ஒரு மைல் கல்லாக அமைந்தது என்று சொன்னால் மிகையாகாது.

இயேசு சபையினர் தங்களது மறைப்பரப்புப் பணியின் முதற்கட்டமாக சுயசார்புள்ள குடியிருப்புகளை அங்கு வாழ்ந்த பூர்வகுடி மக்களுக்கும், தங்களுக்கும் அமைத்தனர். பின், குவரானி மொழியைக் (Guaraní language) கற்றனர். அம்மொழியில் எழுத்துக்கள் இல்லாமல் பேச்சு வழக்கு மட்டுமே இருந்ததால் அதைக் கற்றுக்கொள்வதென்பது மிகவும் எளிதானதாகவே அமைந்தது. முதற்கிறிஸ்தவர்களும் குவரானி பூர்வகுடியிலிருந்தே வந்தனர்.

கிறிஸ்தவம் படிப்படியாக குவரானி மத்தியில் பரவினாலும், அதற்கு எதிர்ப்பாளர்களும் அதிகளவில் இருந்தனர். இதே காலக்கட்டத்தில் பிரான்சிஸ்கன் மறைபரப்புப் பணியாளர்களும் தங்களது மறைபரப்புப் பணியை இப்பகுதியில் ஆற்றி வந்தனர். 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்சிஸ்கன் மறைபரப்புத்தளத்தைச் சார்ந்த குவரானி பூர்வகுடியைச் சார்ந்த ஒருவரை கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ளாத மபாயேசு (Mbayáes) பூர்வகுடியைச் சார்ந்தவர்கள் அவரை கொல்லும் நோக்கத்துடன் ஆயுதங்களுடன் சூழ்ந்துகொண்டனர். உயிரைக் காப்பாற்றிக்கொள்ள குவரானி பூர்வக்குடியைச் சார்ந்த அவர் அடர்ந்த காட்டில் இருந்த மிகப்பெரிய மரத்தின்பின் ஒளிந்து கொண்டார். பயமும், அச்சமும் அவரை ஆட்கொள்ள நடுநடுங்கியவராய், ஆபத்தில் உதவும் அமல அன்னையிடம் தன்னை ஒப்புக்கொடுத்தார். தான் காப்பாற்றப்பட்டால் தான் ஒளிந்திருக்க உதவிய அப்பெரிய மரத்தின் கிளையிலிருந்து அன்னையின் உருவத்தை வடித்தெடுப்பதாக வேண்டிக்கொண்டார். பிரான்சிஸ்கன் பணியாளர்கள் தனக்குச் சுட்டிக்காட்டிய அமல அன்னையிடம் கண்களை மூடி








# காலங்களில் வசந்தம் நீயே அம்மா!

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி

குளிரிலும் பனியிலும் குன்றிய குவலயம்
பகலவன் அணைப்பைத் தேடியே உயிரினம்
இளவேனில் கால வருகையினாலே
ஏக்கம் நீங்கி இன்முகம் காட்ட
பசும்புல் பாய்கள் பாங்குடன் விரிய
பல வண்ண மலர்கள் பாரெங்கும் மலர
நற்சுவைக் கனிகளை நானிலம் நல்க
புள்ளினம் கீச் கீச் பூபாளம் இசைக்க
வந்தது 'மே' எனும் மகிழ்வுறு வசந்தம்.
'மேரி' என்பதன் சுருக்கமே 'மே' என்பாருண்டு
'மே' எனில் வசந்தம் எனப் பொருளுண்டு
'மே' எனில் இனிமையின் முழுமை
இம்மாதம் இங்கு கோடை வெம்மைதான் - ஆனால்
மேலை நாட்தனில் - இது
இதம் தரும் வசந்த காலம்
ஒரு பெண்ணின் அழகையும் பண்பையும்
பாடவந்த கவியரசு கண்ணதாசன்
"காலங்களில் அவள் வசந்தம்" என்றார்
அவ்வசந்தமே நம் அன்னை மரியா.
அம்மா என்றால் அன்பு
அம்மா எனில் - அணைப்பவள்
அன்போடு அமுதையும் பண்பையும்
ஊட்டி வளர்ப்பவள்
பிள்ளை நலனுக்காகத் தன்னையே தியாகம் செய்பவள் என்பது பொருள்
உலக அன்னையர்.........
இவ்வுலகில் அவர்கள் வாழும் காலம் மட்டுமே – ஆனால்
மண்ணுலக வாழ்விலும் விண்ணுலக வாழ்விலும்
குழந்தைகள் நம்மை
அணைத்துக் காப்பவள் அன்னை மரியா.
இன்றைய காலச் சூழலில்
அகில உலக மக்களையும் கொரோனா வைரஸ்
நிலை குலையச் செய்து கொண்டிருக்கிறது



நம்மையெல்லாம் விசுவாசத்தில் வாழச் செய்கிறார். கிறிஸ்து நம்மில் வாழும்போது நமக்கு ஒரு குறையும் வராது. வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார் என்று கூறும் புனித பவுலடிகளாரின் வார்த்தைகளுக்கேற்ப வாழ்ந்து நம் வாழ்வில் வரும் சோதனைகளை அவரது வல்லமையால் வென்றிட கிறிஸ்துவை மையப்படுத்தி வாழ்வோம். அதற்காக வரம் வேண்டி இப்பலியில் இணைவோம்.

## முதல் வாசக முன்னுரை

ஆண்டவர் இரக்கமும் பரிவும் உள்ள இறைவன் சினம் கொள்ள தயங்குபவர் பேரன்புமிக்க நம்பிக்கைக்குரியவர் என மோசே ஆண்டவரின் பெருமையை கூறும் இவ்வாசகத்திற்குச் செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் அன்பும் தூய ஆவியானவரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக என திருத்தூதர் பவுல் மூவொரு இறைவனின் பெயரால் ஆசி வழங்குவதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தைக் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. மூவொரு இறைவா! திருஅவையை வழிநடத்தும் எல்லா பணியாளர்களும் உம்மைப்போன்று ஒற்றுமையுடன் இருந்து செயல்பட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்ய வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. மூவொரு இறைவா! பல்வேறு காரணங்களால் பிரிந்து ஒற்றுமையின்றி இருக்கும் இந்த உலகத்தை ஆசீர்வதித்து சமாதானத்தைப் பொழியவும் சமநிலையாக வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. மூவொரு இறைவா! எங்கள் குடும்பங்களை ஆசீர்வதித்து வழிநடத்தவும், எங்கள் அனைவரிலும் அமைதியும் ஒற்றுமையும் அன்பும் பெருகவும் ஒருவர் மற்றவரைப் புரிந்து வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. மூவொரு இறைவா! நோயுற்றவர்களை குணமாக்கவும் நலமானவர்களைப் பாதுகாக்கவும் உம்மை வேண்டுகிறோம். இதன்மூலம் மூவொரு இறைவனுக்கு சாட்சியாய் வாழ்ந்து சிறக்க வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.







வேண்டிக்கொண்டே இருந்த சமயத்தில் அவரைத் தேடிவந்தவர்கள் அவர் இருந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் அவ்விடத்தைக் கடந்து சென்றனர். தன்னைத் தேடியவர்கள் தன்னைக் கடந்து சென்றவுடன், தன்னை பாதுகாத்த அமல அன்னைக்கு தன் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை சமர்ப்பித்தார். அன்னைக்கு தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அம்மரத்திலிருந்து ஒரு பெரிய கிளையை வெட்டிவந்து அன்னையின் திருஉருவத்தை வடிக்கலானார். அம்மரக்கிளையிலிருந்து ஒரு பெரிய திருஉருவத்தையும், ஒரு சிறிய திருஉருவத்தையும் அவர் வடித்தெடுத்தார். பெரிய திருஉருவத்தை தொபாத்தி (Tobati) ஆலயத்திற்கு வழங்கினார். சிறிய திருஉருவத்தை தன் பக்திமுயற்சிகளுக்காக தன் இல்லத்திலேயே வைத்திருந்தார்.

கி.பி. 1603ஆம் ஆண்டு தபாய்குஆ (Tapaicuá) ஏரியில் ஏற்பட்ட பெரு வெள்ளப்பெருக்கு பிராயு (Pirayú) சமவெளி முழுவதையும் பாதித்தது. இந்த வெள்ளப்பெருக்கில் அன்னையின் திருஉருவமும் அடித்துச்செல்லப்பட்டது. வெள்ளப்பெருக்கு முடிந்ததும் அன்னையின் திருஉருவம் எந்த சேதமுமில்லாமல் கிடைத்தது. அது முதல் "புதுமை அன்னையின்" (Virgin of Miracles) புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது. அப்பகுதியைச் சார்ந்த ஒரு தச்சர் அன்னைக்கு ஒரு சிற்றாலயத்தை அமைத்தார். அது முதல் ககுபே (Caacupé) நகர் அன்னை என்றழைக்கப்பட்டார்.

அன்னை வட்டவடிவ முகத்தையும், நீல நிறக்கண்களுடனும், ஆழ்ந்த செபநிலையில் கரங்களை குவித்தவராக இருக்கிறார். அன்னையானவர் வெள்ளை உடையோடும், நீல நிற மேலங்கியுடனும் தங்க நிற நூலிலையிடனும் இருக்கிறார். அன்னையானவர் பிறை நிலவின் மேல், அசுரபாம்பை மிதித்து நிற்பவராக தொடக்க நூலிலும், திருவெளிப்பாடு நூலிலும் குறிக்கப்பட்டவராக இருக்கிறார்.

அன்னையின் திருத்தலக் கட்டிடப் பணியானது 1945 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. இப்பணியானது இன்று வரை முடிவடையாமல்

இருந்தாலும், 1980 ஆம் ஆண்டிலிருந்து அன்னையின் திருஉருவமானது அனைவரின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 8 ஆம் நாள் பராகுவேவின் விசுவாசத்தின் அடிநாதமாக விளங்கும் ககுபே அன்னையை நோக்கி பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர். ஒவ்வொரு நாளும் தங்களை விசுவாசத்தில் வளர்த்தெடுக்கும் தாய், தன் திருமகன் இயேசுவின் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையில் நாளும் வழிநடத்தி வருகிறார், தாங்கள் விரும்பி கேட்கிற வரங்களில் எது தேவையோ அவற்றை தனது திருமகனிடம் பரிந்துபேசி பெற்றுத்தருகிறார் என்பதால், நன்றி உணர்வோடு அவரிடம் கூடிவருகின்றனர் பராகுவே மக்கள்.

**செபம்:** உம்மை நாடி வருகிற ஒவ்வொருவருக்கும் நலம்பெற்று தருகின்ற ககுபே நகர் அமல அன்னையே, மனித குலம் ஒரே குரலில் உம்மை நோக்கி எழுப்பும் அவல குரலைக் கேட்டருளும். நாங்கள் பாவம் செய்தோம், உம் திருமகன் இரத்தம் சிந்தி பெற்று தந்த மீட்பை எங்களால் வாழ இயலாத நேரங்களுக்காக மனம் நொந்து போகிறோம். கொரோன நோய்கிருமியின் தாக்கத்திலிருந்து உம் பிள்ளைளாகிய எங்களைக் காப்பாற்றும்.



*திருப்பயணம் தொடரும்....*





தந்து வழிநடத்துகிறார். ஆவியானவர் நம்மில் செயல்பட சீடர்களைப்போல் செபத்தில் நிலைத்திருப்போம் இத்திருப்பலி வழியாக.

### முதல் வாசக முன்னுரை

பெந்தகோஸ்தே என்னும் நாளில் திருத்தூதர்கள்மீதும் அன்னை மரியாள்மீதும் தூய ஆவியார் நெருப்பு வடிவில் இறங்கி வந்து அவர்களை ஆட்கொண்டதை விளக்கும் இவ்வாசகத்திற்குச் செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

தூய ஆவியார் ஒருவரே. அனைவரின் நலனுக்காக தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் பல்வேறு வகைகளில் வெளிப்படுகிறது. நாம் அனைவரும் தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம் எனக்கூறும் இறைவார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம்.

### மன்றாட்டுகள்

1. வழிநடத்துபவரே எம் இறைவா! திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தூய ஆவியாரின் வழிகாட்டுதலின்படி வாழ வளர உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. வளங்களைப் பொழியும் எம் இறைவா! எங்கள் நாட்டின் இயற்கை வளங்களைப் பேணி பாதுகாக்கும் அனைவரும் தூய ஆவியானவரின் தூண்டுதலின் வழியாக இயற்கையை வளர்த்தெடுக்க உமதருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. குணமளிக்கும் எம் இறைவா! வீடுகளிலும் மருத்துவமனைகளிலும் பல்வேறு நோய்களினால் அவதிப்படும் அனைவரும் தூய ஆவியானவரின் அபிஷேகத்தில் குணம்பெற்று திருஅவைக்கு சான்றுபகர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. வாழ்வின் ஊற்றே எம் இறைவா! எல்லா இளைஞர்களையும் இளம்பெண்களையும் தூய ஆவியானவர் ஆட்கொண்டு அவர்களையும் அவர்களுடைய வாழ்க்கைமுறைகளையும் மாற்றி திருஅவைக்கும் நாட்டிற்கும் பணிபுரியும் வரத்தையும் கனியையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## மூவொரு கடவுள் பெருவிழா 07-06-2020
## (விப 34:4-6,8-9; 2கொரி 13:11-13; யோவா 3:16-18)

### திருப்பலி முன்னுரை

இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவருமான கடவுள், தந்தை மகன் தூய ஆவியாருக்கு மகிமை உண்டாகுக! தமத்திரித்துவப் பெருவிழாவைக் கொண்டாடும் இந்நாளில் தந்தை மகன் தூய ஆவியால் திருமுழுக்குப்பெற்ற நாம் ஒவ்வொருவரும் அவருடைய சாயலைக் கொண்டவர்களாக வாழ்கின்றோம். உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன் என்று கூறி

2. விண்ணில் வாழ்பவராம் இறைவா! இவ்வுலகின் சுகங்களை நாடி உம்மைப் புறக்கணித்து வாழும் மக்கள் அனைவரும் விண்ணக வாழ்வைப்பற்றி சிந்திக்கவும், நீர் காண்பித்த அன்பு வழியில் நடந்து விண்ணக வாழ்வை உரிமையாக்கிக்கொள்ளவும் உதவ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. புதுமைகளின் நாயகரே எம் இறைவா! பேய்களை ஓட்டவும் நோய்களை நீக்கவும் இறைமகன் இயேசு அளித்த அதிகாரம் எம்மில் செயல்படவும் எங்கள் நம்பிக்கையால் உலகெங்கும் நற்செய்தியைப் பறைசாற்றி உமது அரசை நிறுவவும் ஆற்றல் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அமைதி தருபவரே எம் இறைவா! உலகெங்கும் நோய், பசி, வறுமை, அடக்குமுறை போன்றவற்றால் மனக்கலக்கம் அடைந்து வருகின்ற அனைவருக்கும் உமது அன்பின் அரவணைப்பில் அமைதியை அளிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### பெந்தகோஸ்தே பெருவிழா 31-05-2020
### (திப 2:1-11; 1கொரி 12:3-7,12-13; யோவா 20:19-23)

### திருப்பலி முன்னுரை

தூய ஆவி பெருவிழாவிற்கு வந்துள்ள அனைவருக்கும் விழாவின் வாழ்த்துகள். இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட 50 ஆம் நாளன்று கடவுள் மோசே வழியாக பத்துக் கட்டளைகளைக் கொடுத்ததன் நினைவாக இவ்விழாக் கொண்டாடப்பட்டது. இயேசு ஆண்டவர் உயிர்த்த 50 ஆம் நாளில் தூய ஆவியார் மரியாவின் தலைமையில் கூடியிருந்த சீடர்களை ஆட்கொண்ட நிகழ்வை நினைவுகூரும் பெருவிழா. ‘50வது நாள்’ என்னும் பொருள் கொண்ட ‘பெந்தகோஸ்தே’ நாளில் பக்தியுள்ள யூதர்கள் எருசலேமில் ஒன்றுகூடி இறைவனை வழிபட்டனர். படைப்பின் தொடக்கத்தில் நீர்த்திரளின்மேல் அசைவாடிக் கொண்டிருந்த கடவுளின் ஆவி அன்னை மரியாளின்மீது நிழலிட்ட ஆவியானவர், எலிசபெத்தை முற்றிலுமாக ஆட்கொண்ட தூய ஆவியானவர் இன்று திருஅவைமீது பொழியப்பட்ட கொடைகளின் விழா. புனிதர்களின் புனித வாழ்வுக்கு வழிகாட்டும் ஆவியானவர் இன்று நமது புனித வாழ்வுக்கு வழிநடத்துபவராக, துணையாளராக, கனிகளையும் கொடைகளையும் நமக்கு







# இன்றைய பெண்களில் அன்னை மரியா ③

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச., செர்வைட் கான்வன்ட், பெத்தனி

## உறவுகளின் சங்கமத்தில் மகிழ்பவர் மரியா

அன்னை மரியாவுக்கு பல விழாக்கள் எடுத்து மகிழ்கின்றோம். ஆனால், அவர்தம் உறவினரான எலிசபெத்தை சந்தித்தது ஒரு விழாவாக திருவழிபாட்டில் இடம் பெறுவது நம்மை சிந்திக்க வைக்கிறது. சில பங்குகளில் இது மரியாவின் மினவுதல் விழா என்றும் மினவின மாதா திருவிழா என்றும் அழைக்கப்படுகிறது. மினவின மாதாவே சில பங்குகளில் பாதுகாவலியாகவும் கருதப்படுகிறார்கள். இவ்வாண்டு மே 31 ஆம் நாள் பெந்தகோஸ்து திருவிழா சிறப்பிக்கப்படுகிறது. ஆயினும் அன்றைய நாளில் மரியாவின் பக்தர்கள் அவரது ஆன்மீகத்தின் உறவுப் பரிமாணத்தை தியானிப்பது சாலச் சிறந்தது.

மீட்பரின் தாய், மீட்பரின் முன்னோடியான திருமுழுக்கு யோவானின் அன்னை எலிசபெத்தை சந்தித்த நிகழ்வு நம் மனதில் சில சிந்தனைகளை துளிர்விடச் செய்கின்றன. வானதூதரின் சுபசெய்தியைக் கேட்டவுடன் மரியா எருசலேமிலிருந்து மேல்திசையில் ஆறு மைல் தொலைவில் அமைந்திருந்த யூதேய மலைநாட்டிலுள்ள அயின் கெரேமில் வசிக்கும் எலிசபெத்தைச் சந்திக்க விரைந்தார். மரியா எதற்காக தனிமையான ஒரு நீண்டப் பயணத்தை மேற்கொண்டார்? என்ற கேள்வி நம்மில் எழுவது நியாயமானது. இறைவனின் மகன் தன்னிடம் பிறக்கப்போகிறார் என்ற மகிழ்ச்சி செய்தியை எலிசபெத்துடன் பகிர்ந்துகொள்ளவா? அல்லது கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட எலிசபெத்து கருவுற்று இருப்பதைக் கண்டு வாழ்த்துக் கூறவா அல்லது முதிர் வயதில் இருக்கும் அவருக்கு உதவிகள் செய்யவா அல்லது இளவயதில் கருவுற்றிருக்கும் தான் கடைபிடிக்க வேண்டிய முறைகளைக் கற்றுக்கொள்ளவா? எதுவாக இருந்தாலும் மரியாவின் சந்திப்பு எலிசபெத்துக்கும் அவர் வயிற்றில் வளர்ந்து வந்த திருமுழுக்கு யோவானுக்கும் விவரிக்க முடியாத அருளை, ஆனந்தத்தை, அக்களிப்பைக் கொண்டுவந்தது என்பது உண்மை.

மரியா நாசரேத்திலிருந்து நான்கு நாட்கள் பயணம் செய்து சுமார் 80 மைல்கள் தூரத்தில் இருக்கும் எலிசபெத்து இல்லத்தை அடைகிறார்; தம் உறவினரை வாழ்த்துகிறார். மரியா மட்டும் வாழ்த்தவில்லை, மரியாவின் உதரத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் கடவுளின் மகனும், உலகின்

மீட்பருமான இயேசுவின் எலிசபெத்தையும் தனக்குமுன் வழியை தயார்செய்யக் காத்திருக்கும் முன்னோடியையும் வாழ்த்துகின்றார். வாழ்த்தைக் கேட்டதும் முதலில் திருமுழுக்கு யோவான் மகிழ்ச்சியில் துள்ளுவதாக லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார். எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு மரியாவை ஆண்டவரின் தாயாக, அவர் கருவில் வளரும் குழந்தையை மெசியாவாக இனம் கண்டுகொள்கின்றார். உடனே உரத்த குரலில் 'பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே' என்று ஆசிர்களுக்கெல்லாம் ஊற்றாகிய இறைவனையே புகழ்கின்றார். மேலும் இறைவனின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு, மெசியாவின் தாயாகும் பொறுப்பினை ஏற்று இறைவனின் மீட்பு வரலாற்றில் தனக்குரிய முழு பங்கினை அளிக்க, முழுமையாகத் தன்னை அர்ப்பணிக்கும் மரியின் விசுவாச வாழ்வைப் பாராட்டுகின்றார். கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு நிகழ்வின் நீட்சியாக இந்த சந்திப்பு நிகழ்கின்றது. எலிசபெத்தின் வாழ்த்துரையின் நீட்சியாக மரியாவின் விடுதலைக் கீதம் அமைகின்றது.

பெண்கள் இயல்பாகவே அன்பிற்கும் பாசத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள். இவ்வாறு தங்களின் தாய்மைப் பண்பை ஒளிரச் செய்துகொண்டே இருக்கிறார்கள். இவர்களாலேயே குடும்பங்களில், சமுதாயத்தில் உறவுகள் மலர்கின்றன கட்டிக்காக்கப்படுகின்றன. ஆயினும் இன்றைய நவீன காலத்தில், இத்தகைய நிலை மறையத் தொடங்குகிறது. ஓடிக்கொண்டிருக்கும் உலகத்தைப்போலவே நமது இல்லங்களும் மிக வேகமாக ஓடிக்கொண்டே இருக்கின்றன. எல்லாரும் 'பிசியாக' இருக்கிறோம். பணம், பதவி, சொத்து, வைபவங்கள் என்று எங்கும் எப்போதும் பரபரப்பு. இதைப்பற்றி இந்த சமூக இடைவெளி காலத்திலாவது சிறிது சிந்திப்போம். நமது குடும்பத்தினரை நாம் அன்பு செய்ய, உறவுகளை பரிமாறிக்கொள்ள நேரம் ஒதுக்குகிறோமா என்ற பரிசோதனை செய்துபார்ப்போம். தொலைக்காட்சியிலேயே மூழ்கி, அலைபேசியில் அமிழ்ந்து அமைதியை இழந்து, நோய்களையும் குடும்பங்களில் உறவு விரிசல்களையும் சம்பாதித்ததுதான் மிச்சம். எனவே வீட்டில் உள்ள பெண்கள், அங்குள்ள முதியவர்களின் அருகில் அமர்ந்து அவர்களின் ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்ய முன்வருவோம். வெறும் உணவும் மருந்தும் மட்டும் இன்றைய முதியோர், நோயுற்றோரின் தேவையை நிறைவுசெய்ய முடியாது. நமது உடனிருப்பு, நமது ஆறுதலான வார்த்தைகள் வழிகாட்டுதல் ஆகியவை அவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இம்மாதிரியான உறவுப் பரிமாற்றம் நம் உறவினரையும் தாண்டி நமது அயலாரையும் சென்றடைய வேண்டும். இவ்வாறு செய்தால் முதியோர் இல்லங்களில் எண்ணிக்கை குறையும்.

மரியா நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். தான் இறைவனின் தாய் என்ற சிறப்பு அங்கீகாரத்தைக் கடவுளின் தூதர் வழியாகப் பெற்றிருந்தும் முதிர்ந்த வயதில் கருத்தரித்திருக்கும் தனது உறவினருக்கு உதவி செய்ய விரைகின்றார். ஆறாம் மாதத்தில் இருக்கும் எலிசபெத்தின் தேவைகளை நிறைவுசெய்து அவருக்கு குழந்தை பிறக்கும்வரை அவரது





## இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா 24-05-2020
## (திப 1:1-11; எபே 1:17-23; மத் 28:16-20)

### திருப்பலி முன்னுரை

இறைவனில் இனியவர்களே! ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழாத் திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறோம். மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த இறைமகன் இயேசு நாற்பது நாட்கள் தனது சீடர்களை சந்தித்து உறுதிபடுத்தியபின்பு விண்ணேற்றம் அடைந்து தந்தையாம் இறைவனின் வலது பக்கத்தில் அமர்கிறார். அதே வேளையில் அவருடைய சீடர்கள் ஆண்டவரின் பணியைத் தொடர்ந்து நடத்த அழைக்கப்படுகிறார்கள். சீடர்கள் இயேசுவின் பணியைத் தொடர தூய ஆவியாரை துணையாகக் கொடுக்கப்படுவார். சீடர்கள் இனி இயேசுவின் பணியைத் தொடர வேண்டும் அதாவது இறையாட்சியை அறிவித்து எங்கும் பரவ உழைக்க வேண்டும். இயேசுவின் பணியிலே நமக்கு பங்குண்டு நாமும் அனுப்பப்பட்டவர்களே என்பதை உணர்ந்து செயல்பட வரம் வேண்டி செபிப்போம் இத்திருப்பலியில்.

### முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகம் ஆண்டவரின் விண்ணேற்றத்தை விவரிக்கின்றது. மேலும் நம் விசுவாச வாழ்வின் மையமான ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகையும் நிச்சயம் உண்டு என்று எடுத்துக்கூறும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

கடவுள் தம் வலிமைமிக்க ஆற்றலை செயல்படுத்தி இறந்த கிறிஸ்துவை உயிர்பெற்றெழச் செய்து மாண்புக்குரிய தமது வலப்புறத்தில் அமர்த்தினார். மேலும் அவரை அனைவருக்கும் மேலாக உயர்த்தினார் எனக்கூறும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.



### மன்றாட்டுகள்

1. அன்புத் தந்தையே எம் இறைவா! உம் திருமகனின் உயிர்ப்பு மற்றும் விண்ணேற்றம் ஆகிய மறைபொருட்களின் அடிப்படையில் தோன்றி வளர்ந்த திருஅவையின் நம்பிக்கை வாழ்வு சிறக்க பணியாற்றுமாறு திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் தேவையான ஞானத்தை வழங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பிள்ளைகளாக வாழும் நாமும் பிறரை அன்பு செய்வதன் வழியாக அவருக்கு உயிருள்ள சாட்சிகளாக மாற செபிப்போம் இத்திருப்பலி வழியாக.



### முதல் வாசக முன்னுரை

தொடக்ககாலத் திருஅவையில் திருத்தூதர்கள் நற்செய்தி அறிவித்ததையும் அவர்கள் மக்கள்மீது கைகளை வைத்து தூய ஆவியாம் துணையாளரை பெறச் செய்ததைப்பற்றியும் எடுத்துக்கூறும் இவ்வாசகத்திற்குக் கவனமுடன் செவிசாய்ப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அன்பானவர்களே தீமை செய்து துன்புறுவதைவிட கவுளுக்குத் திருவுளமானால் நன்மை செய்து துன்புறுவதே மேல். கிறிஸ்துவும் நம் பாவங்களை ஏற்று துன்புற்று இறந்தார். மனித இயல்போடு இருந்த அவர் இறந்தார் எனினும் ஆவிக்குரியவராய் உயிர்பெற்று எழுந்தார் எனக்கூறும் இவ்வாகத்திற்குச் செவிமடுப்போம்.

### மன்றாட்டுகள்

1. அன்புத் தந்தையே எம் இறைவா! திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் நல்ல உடல்சுகத்தைக் கொடுத்து ஆசீர்வதித்து திருஅவைக்கு செம்மையான முறையில் பணியாற்ற இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. குணமளிக்கும் எம் இறைவா! எங்கள் நாட்டில் பணிபுரியும் எல்லா மருத்துவர்களையும் செவிலியர்களையும் நிறைவாக ஆசீர்வதிக்கவும் அவர்கள் செய்யும் பணியிலே நிறைவுகாண இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஒற்றுமையின் நாயகனே எம் இறைவா! பல்வேறு காரணங்களாலும் கருத்து வேறுபாடுகளாலும் பிரிந்து வாழும் கணவன் மனைவி மனந்திரும்பி ஒருவர் மற்றவரை அன்பு செய்து ஏற்றுக்கொள்ள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. தூய ஆவியை பொழிபவரே எம் இறைவா! பள்ளி முதல் கல்லூரிவரை பயிலும் குழந்தைகளை நீர் நிறைவாக ஆசீர்வதிக்கவும் தூய ஆவியின் கனிகளையும் கொடைகளையும் பெற்று அன்புசெய்து வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





இல்லத்திலேயே தங்கியிருக்க முடிவு செய்கிறார். தனது தேவையை, உடல்நலத்தை மறக்கிறார். இதே மரியா கானாவூர் திருமணத்தில் இரசம் குறைவுபட்டதை உணர்ந்து அந்தக் குறையை நிவர்த்தி செய்தார். இம்மாதிரியான பல நிகழ்வுகள் அன்னை மரியாவின் வாழ்வில் நடந்திருக்க வேண்டும். மரியாவிடம் விளங்கிய இந்த உயரிய மாண்பைக் கண்டுபாவிப்போம். ஏழ்மையில், வறுமையில், தனிமையில், நோயில் வாடும் நம் உறவினரைத் தேடிச் செல்வோம். அன்பும், பரிவும் நமது உறவினரிடையே பகிரப்படட்டும். இந்த உறவுகளின் சந்திப்பில் இறையாட்சி மலரட்டும். இறைவனைப்பற்றிய அறிவு, இறைவார்த்தையைப்பற்றிய பகிர்வும் இடம் பெறட்டும். மரியாவின் இத்தகையப் பணி தொடக்ககால திருஅவையிலும் நீடித்தது. இத்தகைய மரியாவின் உறவுப் பாதையில் நாமும் பயணித்து உறவுகளைக் கட்டியெழுப்பி ஒரு அர்த்தமுள்ள வாழ்வை வாழ்வோம்.



தொடரும்...

# திருத்தந்தையின் தேவதாய்ச் சிந்தனைகள்



அருள்பணி. அமல் ம. ஊ. ச. உரோமை

## மரியாளுக்கான விசுவாசிகளுடைய பக்தி

மரியன்னை பக்தியானது இறைவனை வழிபடுவதிலிருந்து வேறுபடுகின்றது. இறைவன் எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்யப்பட வேண்டும், அதேவேளையில் ஒரு தாயாகவும் பரிந்துபேசுபவராகவும் (mother and advocate) மரியாள் கௌரவப்படுத்தப்படுகின்றார் என்று திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அவர்கள் தனது மரியியல் சிந்தனையில் கூறுகின்றார்.

1. இரண்டாவது வத்திக்கான் திருச்சங்கம் புனித கன்னி மரியாள்மீதான பக்தி பற்றி கூறுகையில் 'திருஅவையில் என்றும் இருந்துள்ள இவ்வணக்கம் உண்மையிலேயே தனிப்பட்டது; மனிதரான வாக்குக்கும் தந்தைக்கும் தூய ஆவியார்க்கும் நாம் அளிக்கும் ஆராதனையிலிருந்து உள்ளியல்பிலேயே இது வேறுபட்டது' *(Lumen gentium, n. 66)* என்கின்றது.

இந்த வார்த்தைகளால் இறைத்திட்டத்தில் திருஅவை என்னும் வத்திக்கான் சங்க ஏடானது மரியன்னை பக்தியின் பண்புகளை வலியுறுத்துகிறது. மரியாவுக்கான விசுவாசிகளுடைய வணக்கமானது (veneration of the faithful for Mary) மற்ற புனிதர்களிடம் அவர்கள் கொண்ட பக்தியைவிட (devotion to the other saints) உயர்ந்தது என்றாலும், கடவுளுக்கு ஒதுக்கப்பட்ட ஆராதனையைவிட (adoration reserved to God) இது தாழ்ந்ததாகும், அதிலிருந்து இது வேறுபடுகிறது. 'ஆராதனை' என்ற சொல் கடவுளை படைப்பாளராகவும் உலகனைத்தின் இறைவனாகவும் ஒப்புக்கொண்டு மனிதன் கடவுளுக்கு அளிக்கும் வழிபாட்டின் வடிவத்தைக் குறிக்கிறது. திருத்தூதரான புனித தோமையாரோடு வியப்பில் ஆழ்ந்து தந்தையோடு, 'என் ஆண்டவரே, என் தேவனே!' (யோவா 20:28) என்று சொல்லி கிறிஸ்துவை ஆராதிக்கிறார். இறுதியாக இதே வணக்கச் செயலில் *Nicene-Constantinopolitan* விசுவாச அறிக்கை நினைவுகூறுவதைப்போன்று 'தந்தையோடும் மகனோடும் ஆராதிக்கப்பட்டு மகிமைப்படுத்தப்படுகின்ற' *(DS150)* தூய ஆவியையும் சேர்த்துக்கொள்கின்றனர்.





1. அன்புத் தந்தையே இறைவா! எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம். அவர்கள் நல்லாயன் இயேசுவின் வழியில் இறைமக்களை வழிநடத்துவதற்கு வேண்டிய சக்தியையும் ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. உண்மை ஆயரே இறைவா! ஆறுதல் தரும் வார்த்தைகளைக் கொண்ட இயேசு ஆண்டவரே உம்மைப் போற்றுகிறோம். உள்ளம் கலங்க வேண்டாம் என்னும் உமது வார்த்தைகளுக்காக நன்றி ஆண்டவரே! நீர் காட்டும் பாதையில் நாங்கள் நடந்து கலக்கமின்றி வாழும் வரம் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஆசீர்வதிக்கும் தந்தையே இறைவா! பிரிவினைகளோடும், கசப்புணர்வுகளோடும், பழிவாங்கும் மனநிலையோடும், வேதனைகளோடும், விரக்தியோடும், கண்ணீரோடும் வாழும் கணவன் மனைவி அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களின் அன்பு தூய்மையானதாகவும் நிலையானதாகவும் இருக்கவும் அவர்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப பிரமாணிக்கமாய் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஆறுதலின் ஊற்றே எம் இறைவா! ஆதரவின்றி அனாதைகளாக தெரு ஓரங்களிலும் பேருந்து நிலையங்களிலும் முதியோர் இல்லங்களிலும் தனித்துவிடப்பட்டு வேதனைப்படுகின்ற பெரியோர்களை உம்முடைய இரக்கத்தினால் பாதுகாப்புடன் வாழவும் இத்தலைமுறையினர் பெரியவர்கள் மேன்மையை உணர்ந்து வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பாஸ்கா காலம் 6 ஆம் ஞாயிறு 17-05-2020

### (திப 8:5-8,14-17; 1பேது 3:15-18; யோவா 14:15-21)

## திருப்பலி முன்னுரை

என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைபிடிப்பீர்கள். இவ்வுலகில் வாழும் மனிதர் ஒவ்வொருவரும் அன்பு செய்யப்பட வேண்டும் மற்றும் பாராட்டப்பட வேண்டும் என்று நினைக்கிறோம். யார் நம்மை அன்பு செய்கிறார்களோ இல்லையோ இறைவன் நம்மை அன்பு செய்கிறார். அதனால் மற்றொரு துணையாளரை நமக்குத் தருவதாக இயேசு கூறுகிறார். 'என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன் மதிப்புமிக்கவன், நான் உன்மேல் அன்பு கூர்கிறேன்' (எசா 43:4) என்று எசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் உறுதிபடுத்துகிறார். அன்பினால்தான் வாழ்வு மலர்கிறது. அன்பில்லாமல் மனித வாழ்வு இல்லை. இயேசு நம்மை அன்பு செய்கிறேன் என்று கூறியதோடு தன் வாழ்வையும் நமக்காக சிலுவையில் தியாகம் செய்தார். இயேசுவின் வழியில் அவரது



# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. திமோத்தி ம.ஊ.ச, அன்னை துறவற இல்லம், மகாபலிபுரம்.

### பாஸ்கா காலம் 5 ஆம் ஞாயிறு 10-05-2020
### (திப 6:1-7; 1பேது 2:4-9; யோவா 14:1-12)

## திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்புநிறை சகோதரமே! உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலிக்கு அன்போடு வரவேற்கிறோம். வழியும் உண்மையும் வாழ்வுமான நம் ஆண்டவர் இயேசுவின் பெயரால் ஒன்றுகூடியுள்ளோம். கண்ணீரோடும், ஏக்கத்தோடும், இழப்போடும் வாழுகின்ற நமக்கு மாபெரும் நம்பிக்கையின் செய்தி இன்று தரப்படுகின்றது. 'நான் சொல்வதை நம்புங்கள்; நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்'. கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். தமக்கு அஞ்சி நடப்போரையும் தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார். அவர்கள் உயிரைச் சாவினின்று காக்கின்றார். அவர்களை பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார்' என்பதே அச்செய்தியாகும். ஆகவே நாம் அனைவரும் இறைவனில் எப்பொழுதும் நம்பிக்கை கொண்டு வாழுவோம். அவரில் மகிழ்ந்து அவர் மக்களாய் வாழ இத்திருப்பலியில் வரம் கேட்டு செபிப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகம் இறைவார்த்தையின் இன்றியமையாமையை விளக்குகின்றது. இறைவார்த்தை கற்பிப்பதை தமது பணியாகக் கொண்டு செயல்படவும், இறைவேண்டலிலும் பணியிலும் உறுதியாய் நிலைத்திருக்க அழைப்புவிடுக்கும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.



## இரண்டாம் வாசக முன்னுரை

பேதுரு எழுதியத் திருமடலில் திருஅவையின் அச்சாணியாக இருப்பது கிறிஸ்து இயேசுவே என்பதை வெளிப்படுத்துகிறார். இயேசுவை மையமாகக் கொண்டு திருஅவையும் மக்களும் இருக்கிறார்கள் எனக்கூறும் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுகள்





**மரியன்னை வணக்கம் மூவொரு இறைவனுக்கான ஆராதனைக்கு வழிவகுக்கின்றது**

விசுவாசிகள் மரியாவை 'கடவுளின் தாய்' என்று அழைத்து, ஒரு உயிரினத்திற்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த கௌரவத்தை அவர்கள் அவர்களுக்கு வழங்குவதைப்பற்றி சிந்திக்கும்போது தெய்வீக நபர்களுக்கு நிகரான வணக்கத்தை அவர்கள் இன்னும் வழங்கவில்லை எனலாம். மரியன்னை வணக்கத்திற்கும் மூவொரு இறைவனுடைய ஆராதனை வழிபாட்டிற்கும் மனுவுருவான வார்த்தைக்கும் இடையில் எல்லையற்ற இடைவெளி உள்ளது.

இதன் விளைவாக புனித கன்னி மரியாளை வணங்கும்போது சில சமயங்களில் கடவுளுடைய வழிபாட்டில் பயன்படுத்தப்படும் சொற்களை நமக்கு நினைவுபடுத்தினாலும், அது முற்றிலும் மாறுட்ட அர்த்தத்தையும் மதிப்பையும் கொண்டுள்ளது. இவ்வாறு மரியாளுக்கான விசுவாசிகளுடைய அன்பானது கடவுளுக்கான அவர்களுடைய அன்பிலிருந்து வேறுபடுகின்றது: எல்லாம் வல்ல இறைவன் எல்லாவற்றிற்கும் மேலாக முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும் நேசிக்கப்பட வேண்டும் (மத் 22:37) என்றாலும்கூட ஆன்மீகரீதியாக குழந்தைகள் தங்கள் தாயிடம் வெளிப்படுத்தும் பாசத்தை (affection of children for their mother) கிறிஸ்தவர்கள் அன்னை மரியாளிடம் கொண்டுள்ள பாசத்தோடு ஒப்பிடலாம்.

2. இருந்தாலும்கூட மரியாள் பக்திக்கும் கடவுளுக்கு வழங்கப்படும் வழிபாட்டிற்கும் இடையே ஒரு தொடர்ச்சி உள்ளது: உண்மையில் மரியாளுக்கு வழங்கப்படும் மரியாதை முறைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் மூவொரு இறைவனுக்கான ஆராதனைக்கு வழிவகுக்கிறது. புனித கன்னி மரியாளுக்கான கிறிஸ்தவர்களுடைய வணக்கமானது, 'மனுவுருவான வார்த்தை, தந்தையாம் கடவுள் மற்றும் தூய ஆவியானவரின் வழிபாட்டிற்கு மிகவும் சாதகமானதாக உள்ளது' என்று வத்திக்கான் திருச்சங்கம் நினைவுகூறுகிறது. இது மேலும், 'இடத்தின் சூழ்நிலைகளையும், நம்பிக்கை கொண்டோரின் குணநலன்கள், மனநிலைகள் ஆகியவற்றையும் மனதில்கொண்டு வழுவற்ற மரபுக் கோட்பாட்டிலிருந்து மாறுபடாத இறையன்னைக்குரிய பல்வகையான பக்தி முயற்சிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பக்தி முயற்சிகளின் பயனாக நாம் தாயைப் பெருமைப்படுத்தும்போது, மகனை அறிந்து, அன்பு செய்து மாட்சிமைப்படுத்துகிறோம்; அவர் கட்டளைகளின்படி நடக்கிறோம். ஏனெனில் அவருக்காகவே அனைத்தும் உள்ளன (கொலோ 1:15-16); 'தம் முழுநிறைவும் அருள் குடிகொள்ள கடவுள் திருவுளம் கொண்டார்' (கொலோ 1:19) என்கின்ற ஒரு கிறிஸ்தியல் கண்ணோட்டத்தையும் கூடவே தருகின்றது *(Lumen gentium, n. 66)*.

திருஅவையின் ஆரம்ப நாட்களிலிருந்து மரியன்னைபக்தி என்பது கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள பின்பற்றலை வளர்ப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டது. கடவுளின் தாயை வணங்குவது கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை உறுதிபடுத்துவதாகவும். உண்மையில் எபேசு திருச்சங்கத் தந்தையர்கள், மரியாளை *Theotókos* அதாவது 'இறைவனின் தாய்' என்று அறிவிப்பதில் உண்மையான இறைவனாகிய கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கையை உறுதிசெய்வதாகவேக் கருதினர்.

மரியாளின் பரிந்துரையால் கானாவூர் திருமணத்தில் பெறப்பட்ட இயேசுவின் முதல் அதிசயம்பற்றிய குறிப்பானது மரியாளுடைய செயலானது தன் மகனை மகிமைப்படுத்துவதற்கு எவ்வாறு உதவியாக இருந்தது என்பதைக் காட்டுகிறது. உண்மையில் இதைத்தான் நற்செய்தியாளர் யோவான் இவ்வாறு கூறுகிறார்: ‘இதுவே இயேசு செய்த முதல் அரும் அடையாளம். இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது. இதன் வழியாக அவர்தம் மாட்சியை வெளிப்படுத்தினார். அவருடைய சீடரும் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்’ (யோவா 2:11).

3. மரியன்னை பக்தியானது திருஅவையின் மனநிலைக்கேற்ப அதைப் பின்பற்றுபவர்களில் தந்தை மற்றும் தூய ஆவியையும் வணங்குவதை ஊக்குவிக்கிறது. உண்மையில் மரியாளுடைய தாய்மையின் மதிப்பை அங்கீகரிப்பதன்மூலம் விசுவாசிகள் அதில் தந்தையினுடைய அன்பின் சிறப்பானதொரு வெளிப்பாட்டைக் கண்டுபிடிக்கின்றனர். கன்னித்தாயின் மறையுண்மை குழந்தையின் கருத்தரிப்பை தனது வயிற்றில் கொண்டுவந்து தனது வாழ்க்கையை தொர்ந்து வழிநடத்திய அந்தத் தூய ஆவியின் செயலை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

பிரபலமான கிறிஸ்தவ பக்தி முயற்சிகளால் மரியாளுக்குக் கூறப்பட்ட ஆறுதல் அளிப்பவர் (Comforter), பரிந்து பேசுபவர் (Advocate) மற்றும் உதவி செய்பவர் (Helper) என்ற தலைப்புகள் மறைக்கப்படுவதில்லை. மாறாக, ஆறுதலளிக்கும் ஆவியானவரின் செயலை உயர்த்தி பிடிக்கின்றது மற்றும் அவருடைய கொடைகளிலிருந்து பயனடைய விசுவாசிகளை ஊக்குவிக்கின்றது.

**மரியாளுக்கு வழங்கப்படும் கொடைகள் தனச்சிறப்புமிக்கவை**

4. இறுதியாக திருச்சங்கமானது மரியன்னை பக்தியின் ‘தனித்துவத்தை’ நினைவுபடுத்துகிறது மற்றும் இறைவனை ஆராதிப்பதற்கும் புனிதர்களை வணங்குவதற்கும் உள்ள வித்தியாசத்தையும் வலியுறுத்துகிறது.

இந்த மரியன்னை பக்தியானது மறுக்க முடியாததொன்றாகும். ஏனெனில் இது ஒரு மனிதருடைய தனித்துவமான பரிபூரண வாழ்வு மற்றும் பணியை நோக்கி இட்டுச் செல்கின்றது. உண்மையில் மரியாவுக்கு தெய்வீக அன்பினால் வழங்கப்பட்ட அவளது மாசற்ற புனிதத்தன்மை, அவளுடைய தெய்வீகத் தாய்மை, மீட்புப் பணியில் அவளுடைய ஒத்துழைப்பு மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக சிலுவையின் தியாகம் போன்றவைகள் முற்றிலும் விதிவிலக்கானவை.

மரியன்னை பக்தியானது மரியாளுக்கான திருஅவையினுடைய பாராட்டையும் அவளுக்கு வழங்கப்பட்ட சிறப்புமிக்க கொடைகளின் அங்கீகாரத்தையும் வெளிப்படுத்துகிறது. திருஅவையின் தாய் மற்றும் மனுக்குலத்தின் தாயான அவளைத் தங்கள் தாயாக நினைத்து பிள்ளைகளுக்குரிய அன்போடு கிறிஸ்தவ மக்கள் அவளுடைய பரிந்துரையை வேண்டுவதற்கும், விண்ணக மகிழ்வின் நம்பிக்கையில் இப்பூவுலக வாழ்விற்குத் தேவையான செல்வங்களைப் பெறுவதற்கும் நம்பிக்கையினால் அவர்களை ஊக்குவிக்கின்றது.

மூலம்: **John Paul II, *Faithful have filial devotion to Mary*, in *l'Osservatore Romano* weekly edition in English, 29 October 1997, p. 7.**





# மகிழ்ச்சிநிறை பேருண்மைகள்

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

## 2. மரியா எலிசபெத் அம்மாவை சந்தித்தல்

கன்னி மரியாவுக்கு கடவுளின் தூதர்
மங்கள வாழ்த்து சொன்னதுமே
துள்ளி குதித்தாரோ? எண்ணி களித்தாரோ?
மன்றம் பகன்றாரோ? இல்லை

அதிர்ந்த செய்தியாய் அமைந்த போதினும்
தன்னை மறந்தார் அன்னை
முதிர்ந்த வயதில் கருவுற் றிருக்கும்
சிற்றன்னையை நினைந்தார் சிந்தை

சிவந்த கரம் உடையவர் அன்றோ?
விரைந்து சென்றார் உதவ!
நிறைந்த மனம் கொண்டவர் அன்றோ?
மகிழ்ந்து சென்றார் பணிய!

பலகல் தொலைவு சிலகல் தொலைவாய்
சுருங்கி போனதே மாயம்!
கற்கள் முட்கள் நிறைந்த பாதையும்
சிதைந்து போனதே அபாரம்!

கன்னி மரியவள் கடவுள் தாயானதை
எலிசபெத் எங்ஙனம் அறிந்தார்?
தன்னிடம் வந்ததால் தனயன் குதிப்பதை
வயிற்றில் தன்மனம் மகிழ்ந்தார்

ஆண்டவர் திருவுளம் ஆகட்டும் என்றுமே
இருவருமே எண்ணி குதித்தார்
ஆள்பவர் ஆற்றலை அனுபவ வார்த்தையால்
அகமகிழ்ந்தே சொல்லி களித்தார்

ஆளும் வர்க்கத்தையும் அடிமை வர்க்கத்தையும்
மாற்றி அமைக்கும் ஆண்டவரை!
ஆணவம் கொள்வோரை அநியாயம் செல்வோரை
தூக்கி எறியும் வல்லவரை!

தாழ்நிலை கொண்டோரை தகுதிகள் உள்ளோரை
தரம் உயர்த்திடும் தூயவரை!
தலைமுறை தோறும் தாழ்ந்து போற்றுவோம்
தரணியில் உயிர் உள்ளவரை!